பக்கங்கள் 14+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 24 சனிக்கிழமை 08.03.2025 | அதிர்வு 217

## 17 இந்திய மீனவர்களுக்கு பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

(மன்னார் நிருபர்)

இலங்கைக் கடல் எல்லை பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ரணிலின் குடியுரிமையை இரத்துச் செய்ய வேண்டும்

### இப்படி வலியுறுத்துகின்றது முன்னிலை சோஷலிசக் கட்சி

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குடியுரிமையை இரத்துச் செய்து, அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று முன்னிலை சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அதன் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அல்ஜஷீராவுக்கு கருத்துரைத்த முன்னாள் ஜனாதிபதி ரணில், பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதா? எனக் கேள்வி எழுப்பியதன் ஊடாக, அந்த அறிக்கை அரச கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படாத ஒன்று எனக் குறிப்பிடுகின்றார். 03▶

## ஜனாதிபதியுடன் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் நிகழ்நிலை சந்திப்பு






ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவாவுக்கும் இடையிலான நிகழ்நிலை சந்திப்பு நேற்று நடைபெற்றது.

2023 மாரச் மாத்தில் ஆரம்பமான 48 மாதங்கள் நீடிக்கப்பட்ட நிதி வசதிக்கு அமைவான ஒப்பந்தம் பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையிலான ஒத்துழைப்பை பலப்படுத்திக் கொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது, 2022 ஆம் ஆண்டில் முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் போது சர்வதேச நாணய நிதியம் வழங்கிய தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

பொருளாதார மறுசீரமைப்பை செயற்படுத்தல், பேரண்ட பொருளாதார ஸ்திரத் தன்மையை வலுப்படுத்தல், ஆபத்திற்கு உள்ளாக கூடிய தரப்பினருக்கு உதவுதல் மற்றும் நிர்வாகத்தை வலுப்படுத்தல் உள்ளிட்ட துறைகளில் இலங்கை அடைந்திருக்கும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். 02▶

# பெண்களின் திறமைகளுக்கு இடமளித்து அவர்களைப் பாதுகாப்பது எமது கடமை!

## மகளிர் தினச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



பெண்களின் திறமைகளுக்கும் ஆற்றலுக்கும் தகுந்த இடமளித்து, வீட்டிலும், வெளியிலும், தொழில் புரியும் இடத்திலும் அவர்களைப் பாதுகாத்து, அவரது உரிமைகளை நிலை நிறுத்துவது அனைவரதும் கடமையாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மகளிர் தினம் தொடர்பில் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு தாய், மனைவி, சகோதரி, மகள் மற்றும் நண்பி போன்ற பல்வேறு வகிபாகங்களின் பிரதிநிதியாக இருக்கும் பெண், ஒரு நாட்டின், சமூகத்தின் முக்கிய இயக்க சக்தியாகவும் உயிர் நாடியாகவும் இருக்கிறார்.

சூரியன் உதிப்பதற்கு முன்பே விழித்தெழும் அவர், நள்ளிரவுவரை தனது குடும்பத்துக்காகவும், நாட்டுக்காகவும் செய்யும் அந்த மகத்தான சேவையை விலைமதிப்பிட முடியாது.

எமது நாட்டின் முக்கிய உயிர் நாடியாக இருப்பது பெண்ணே. பாரம்பரிய வகிபாகங்களை மறந்து, அறிவால், திறமையால், நிபுணத்துவத்தால் நாட்டுக்குச் சேவை செய்யும் அவர், நாட்டுக்கு டொலர் ஈட்டித்தரும் ஆடை தொழிற்சாலையில் இருந்து பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழில்முனைவோர் வரை ஆண்களுக்கு சளைக்காத பெரும் பங்களிப்பை வழங்குகிறார்.

நாட்டுக்காக, சமூகத்துக்காக, குடும்பத்துக்காக அவர் காட்டும் அந்த அசைக்க முடியாத தைரியத்துக்கு உரிய மதிப்பையும் இடத்தையும் வழங்குவது நம் அனைவரின் பொறுப்பும் கடமையுமாகும்.

இதன்போது பெண்ணின் திறமைகளுக்கும் ஆற்றலுக்கும் தகுந்த இடமளித்து, வீட்டிலும், வெளியிலும், தொழில் புரியும் இடத்திலும் அவரைப் பாதுகாத்து, அவரது உரிமைகளை நிலைநிறுத்தி, நாட்டுக்கு அவர் ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்ற தேவையான வழிகளை திறந்துவிட வேண்டும்.

தலைமைப் பொறுப்பில் இருந்து கொள்கை வகுப்பு வரை மற்றும் அதற்கு அப்பாலும் பெண்களை வலுவூட்டுவது நம் அனைவரின் பொறுப்பாகும்.

“நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்..” என்ற தொனிப்பொருளுடன் இந்த ஆண்டு மகளிர் தினத்தைக் கொண்டாடும் நாம், இதை வெறும் வார்த்தைகளுக்கோ அல்லது தொனிப்பொருளுக்கோ மட்டுப்படுத்தாமல், வார்த்தையின் முழு அர்த்தத்தையும் நடைமுறைப்படுத்துவது நமது கடமையும் பொறுப்புமாகும்.

இந்த உயரிய பொறுப்புக்காக எந்த நேரத்திலும் தேவையான பங்களிப்பையும் உந்து சக்தியையும் வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

வலுவூட்டப்பட்ட பெண்களால் நிறைந்த அழகான இலங்கைக்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.- என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஜனாதிபதியுடன்...**

கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் முகாமைத்துவப் பணிப்பாளர், சிரேஷ்ட முகாமைத்துவம் உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழுவினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பையும் ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

உலக பொருளாதார ஸ்திரமற்ற தன்மைக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரத்தை தாங்கிக்கொள்ளும் நிலையுடையதாக மாற்றுவதற்கு இந்தத் தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பேரண்ட பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வை முழுமைப்படுத்தல் மற்றும் பிணைமுறி பரிமாற்றம் மற்றும் கடன் மறுசீரமைப்பைச் சாதகமான முறையில் நிறைவு செய்தமை தொடர்பில் ஜோர்ஜிவா ஜனாதிபதிக்கு வாழ்த்துக் கூறினார்.

முக்கிய மறுசீரமைப்பை முன்னெடுக்க இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு முகாமைத்துவ பணிப்பாளர் பாராட்டு தெரிவித்ததோடு, இலங்கையின் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பதற்கான சர்வதேச நாணய நிதியத்தின் அர்ப்பணிப்பையும் உறுதிப்படுத்தினார்.

குறிப்பாக உலக ஸ்திரமற்ற தன்மையின் உயர்வு, உலக பொருளாதார முன்னேற்றத்தின் மந்த நிலை மற்றும் உலக கடன் மட்டத்தின் உயர்விற்கு மத்தியில் நல்லாட்சி கட்டமைப்புடன் பேரண்ட பொருளாதார நியதிகளையும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜோர்ஜிவா வலியுறுத்தினார்.

இலங்கை மக்களின் வலுவான ஆணையை பிரதிபலிக்கும் வகையில், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லவற்கும், இணக்கம் காணப்பட்ட இலக்குகளை மக்களின் விருப்பத்துக்கு அமைய அடைந்துகொள்வதற்குமான தயார்நிலையை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதற்காக வறியவர்களின் முன்னேற்றத்துக்கு தேவையான பொறிமுறையை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், நலன்புரிச் செலவுகளை வலுப்படுத்தல் என்பவே அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும் விடயங்களாக உள்ளன என்பதையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

மின்சார துறை உள்ளிட்டவற்றில் சரியான நிர்வாகம் மற்றும் செலவு – மீளமைத்தல் விலை நிர்ணயத்தின் ஊடாக அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முனைவுகளை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

கடன் அச்சுறுத்தலை குறைத்தல் மற்றும் நிலையான மற்றும் பேரண்ட அபிவிருத்தியை மேம்படுத்த பலதரப்பு கூட்டிணைவுகளின் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது வலியுறுத்தினார்.

நீடிக்கப்பட்ட கடன் வசதி வேலைத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள மீளாய்வுகளை சாதகமாக நிறைவு செய்வதற்கான அரசின் அர்ப்பணிப்பை ஜனாதிபதி இதன்போது கிரிஸ்டலினா ஜோர்ஜிவாவிடம் உறுதிப்படுத்தினார்.

எதிர்காலத்தைப் பார்க்கும்போது, இலங்கையை நிலையான மற்றும் சமநிலையான அபிவிருத்தியை நோக்கி தீர்மானம் மிக்க வகையில் நகர்த்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை பின்வாங்காமல் செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜோர்ஜிவா இதன்போது வலியுறுத்தினார்.

குறிப்பாக தொழில்நுட்பம் மற்றும் உலக அரசியலின் துரித வளர்ச்சியை கருத்தில் கொண்டு, நிலையான வகையில் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பும் செயற்பாடுகளின் சவால்மிகுந்த தன்மையை அவர் ஏற்றுக்கொண்டதோடு, இலங்கையின் நிலையான பங்குதாரராக சர்வதேச நாணய நிதியத்தின் வகிபாகத்தையும் தெளிவுபடுத்தினார்.

அனைத்து துறைகளும் உள்ளடங்கும் அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தலுக்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்தும் தயாராக இருப்பதையும் கிரிஸ்டலினா உறுதிப்படுத்தினார்.

இலங்கை நிலைப்பேறான ஸ்திரதன்மையை அடைந்துகொள்வது தொடர்பான தொடர்ச்சியான கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் அவசியம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளருக்கு இடையில் இதன்போது இருதரப்பு ரீதியான இணக்கம் எட்டப்பட்டது.

செழுமையான மற்றும் நிலையான எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்து செயற்படுதல் மற்றும் அன்னியோன்னியமாக செயற்பட வேண்டியதன் அவசியமும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரணிலின் குடியுரிமையை...**

ஜனாதிபதியாலேயே குறித்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. அவ்வாறானால் அப்போதைய ஜனாதிபதி எதற்காக அதன் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் பயணத்தைப் பாதுகாப்பதற்காகவே அவ்வாறு செய்தார்." – என்றார்.

**17 இந்திய...**

மீனவர்கள் 17 பேருக்கு 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் மேலும் ஒரு மீனவருக்கு இரண்டரை இலட்சம் ரூபா தண்டப் பணமும் விதித்து விடுதலை செய்யுமாறு மன்னார் நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை தீர்ப்பு வழங்கியுள்ளது.

அதேநேரம் நபர் ஒருவர் அனுமதிப் பத்திரம் இன்றி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் இரண்டாவது தடவையாக ஈடுபட்டமை கண்டறியப்பட்ட நிலையில் மேற்படி நபருக்கு 24 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த மாதம் தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 32 மீனவர்களில் நான்கு மீனவர்கள் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனைய மீனவர்களை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

அதேநேரம் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களில் 9 பேர் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதுடன் ஒருவர் இரண்டாவது தடவை இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக 2 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களும் முதல் குற்றத்துக்காக 10 வருட ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் நபருக்கு தலா இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் இலட்சம் ரூபா வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன மன்னார் தாழ்வுபாடு பகுதியில் கைது செய்யப்பட்ட 14 மீனவர்களையும் எதிர்வரும் 14 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சஜித்தின் நப்பாசை

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ரணிலின் தொங்கு பாலத்திலேயே பயணிக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார். ஐக்கிய ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

நெருக்கடியான காலகட்டத்தில் நாட்டை மீட்பதற்காகத் தீர்மானிக்கப்பட்ட அவசரகாலப் பொருளாதாரக் கொள்கைப் பாதையை அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொங்கு பாலம் என்று குறிப்பிட்டிருந்தார்.

“கடந்த அரசாங்கம் பயணித்த தொங்கு பாலத்திலே இந்த அரசாங்கமும் பயணிக்கிறது. பொருளாதாரக் கொள்கையில் அதே வழிமுறைகளையே பின்பற்றி வருகிறது.” - என சஜித் இப்போது கூறியிருக்கின்றார்.

அது ஒரு வகையில் உண்மைதான. தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் ரணில் விக்கிரமசிங்க அரசின் பொருளாதாரக் கொள்கைகளைப் பிய்த்து உதறுவோம் என்று சூளுரைத்த தேசிய மக்கள் சக்தி, இப்போது தேவைக்கு அதிகமான வலிமையுடன் நாடாளுமன்றத்திற்கு வந்த பின்னரும், ரணில் வகுத்த பொருளாதாரக் கொள்கைப் பாதையில் இருந்து விலக முடியாமல் அதன் வழியேதான் பயணிக்கின்றது என்று பொருளாதார நிபுணர்களும் அவதானிகளும் விமர்சிக்கின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவோடு ஜனாதிபதி பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க மஹிந்த தரப்பினருடன் இணங்கி ஆட்சியைத் தொடர்ந்தமையால் அந்த அரசை ரணில் ராஜபக்ஷ அரசு என்று பலரும் விமர்சித்தனர்.

இப்போது அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தனித்துவமாக முடிவெடுத்து, தீர்மானித்து, அரசைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான போதிய வலிமையைக் கொண்டுள்ள போதும், முன்னைய ரணில் விக்கிரமசிங்க அரசின் தொடர்ச்சியாக - அது வகுத்துத் தந்த பாதையிலேயே - அநுராவின் அரசும் ஆட்சியைத் தொடர்கிறது. அதனால் இதனை ‘அநுர விக்கிரமசிங்க அரசு’ என்று சிலர் விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளனர். அதில் தவறில்லை என்று கூறலாம்.

அதனைத்தான் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டுகிறார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டெழுவதற்கு உதவ சர்வதேச நாணய நிதியம் முன் வந்தது. இலங்கையைப் பிணைய எடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் வகுத்த விதிகள், பொருளாதார கட்டுப்பாடுகள், கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் திரும்பவும் பேச்சு நடத்தி, புதிய வழித்தடத்தை - ஒழுங்கு முறைகளை - ஏற்படுத்த வேண்டும் என்பது எதிர்க்கட்சித் தலைவரின் வலியுறுத்தலாக இருந்து வருகின்றது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு சர்வதேச நாணயம் நிதியம் விதித்த நெறிமுறைகள், கட்டுப்பாடுகள் ஒழுங்குகள் தொடர்பில் உரிய மாற்றங்கள் விரைந்து செய்யப்பட வேண்டும் என்பது எதிர்கட்சித் தலைவரின் கோரிக்கை. இல்லையேல் மோசமான நிலைமை ஏற்படும் என்பது அவரது கருத்து.

“ஆனால், இந்த அரசு அப்படிச் செய்ய் மாட்டாது என்பது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் இருந்து நன்றாகத் தெரிகிறது. இவ்வாறு போனால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறே போனால் மற்றுமொரு கடன் மறுசீரமைப்பிற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படும். அரசாங்கம் இவற்றை மறைத்து மக்களை முட்டாள்களாக்கின்றது” எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகின்றார்.

“இந்த நெருக்கடிகளினால் குறுகிய காலத்தில் மூன்றாவது முறையாக மக்கள் அபிப்பிராயத்தை கேட்கும் தேர்தல் வரப்போகிறது. இந்த தேர்தலுக்கு மத்தியில் அரச ஊழியர்களால் சரியான தீர்மானத்தை எடுக்க முடியும்.” - என்று அவர் கூறுகின்றார்.

புதிய அரசுக்கு எதிராக வலிமையான பல்வேறு தொழிற்சங்கங்களும் போர்க்கொடி தூக்கி இருக்கும் இப்போதைய சூழ்நிலையில் - நாட்டில் தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் அரச நிர்வாகம் ஸ்தம்பிக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற பின்புலத்தில் - சரியான தீர்மானத்தை எடுக்க அரச ஊழியர்களுக்கு அழைப்பு விடுக்கின்றார் அவர்.

இன்னொரு ‘அறகலய’ போராட்டம் இந்த அரசுக்கு எதிராக வெடிக்கலாம் என்ற அவரது விருப்பின் - நப்பாசையின் வெளிப்பாடுதான் இந்தக் கருத்து...!



# ஜப்பான் ஜெய்க்கா நிறுவனம் சம்பூரில் பயிற்சி

(எச். எம். ஹலால்தீன், முகம்மது ஜிப்ரான்)



பேஸ் வின்ஸ் ஜப்பான் நிறுவனம் திருகோணமலை மாவட்ட விவசாய திணைக்களத்துடன் இணைந்து ஜெய்கா நிறுவனம் ஊடாக கிடைக்கின்ற நிதி உதவியை அடிப்படையாகக் கொண்டு சேதன விவசாயம் தொடர்பான தொழில்நுட்ப ரீதியான தகவலை வழங்கி வருகின்றது.

ஜப்பான் நாட்டிலிருந்து சேதன விவசாயத்தில் 30 வருடம் நிபுணத்துவம் பெற்ற மிஸ்டர் தனாபே என்பவர் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சம்பூர் கமநல சேவை பிரிவில் செய்முறை ரீதியான பயிற்சியை விவசாயிகளுக்கு வழங்கினார்.

இதன் மூலம் விவசாயிகள் இரசாயன பசளைகளின் செலவினங்களை குறைப்பதற்காக இலகுவாக இயற்கை முறையில் கூட்டெரு தயாரிப்பதற்கான பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.



# நல்லூர் ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன் விழாவுக்கு ஏற்பாடு

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன் விழாவை இவ்வாண்டு கொண்டுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இளையோர் மத்தியில் அடிகளாரின் பல்துறைசார் பணிகளை அறியச் செய்வதை நோக்கமாகக் கொண்டு யாழ்ப்பாண மறை மாவட்டம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ். அமலமரித் தியாகிகள் ஆகிய அமைப்புக்கள் இணைந்து இந்த விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

இதன் தொடக்க நிகழ்வானது எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வளர்ந்த ஊராகிய அச்சுவேலியில் கலாசாரப் பவனியுடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து கலாசாரப் பவனி ஆரம்பமாகி புனித திரேசாள் பாடசாலையைச் சென்றடையும். அங்கு அரங்க நிகழ்வுக் இடம்பெறும்.

முப்பொன் விழாவின் தொடர் செயற்பாடுகளாக பாடசாலை மட்டத்தில் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மற்றும் ஆய்வரங்கம், ஆய்வுநூல் வெளியீடு,



மலர் வெளியீடு,நிறைவு விழா போன்ற பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகளுக்குப் பொறுப்பாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன், ஆசிரிய ஆலோசகர் யோ. யோண்சன் ராஜ்குமார், அருட்பணி. சூ. யே. ஜீவரட்ணம், மற்றும் அருட்தந்தை டியுக் வின்சன், அருட்பணி. அ. றொக்சன் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பியின் வழிகாட்டலுக்கு அமைய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் சமயப்பணி, வரலாற்றுப்பணி, சமூகப்பணி, மொழிப்பணி போன்றவை உள்ளடக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான பொறுப்புக்களை பேராசிரியர் தி. வேல்நம்பி, பேராசிரியர் அருட்பணி ஞா. பிலேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் துறைப் பேராசிரியர் திருமதி சுபதினி றமேஸ் ஆகியோர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் முப்பொன் விழாக்குழுவின் இணைத் தலைவர்களாக அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோரும் இணைச் செயலர்களாக அருட்பணி. செ. அன்புராசா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோரும் பொருளாளராக அருட்பணி. அ.பி. ஜெயசேகரம் அடிகளாரும் செயற்படவுள்ளனர்.

ஜூன், ஜூலை மாதங்களில் பாடசாலை மட்டப் போட்டிகளும் அதனைத் தொடர்ந்து ஓகஸ்ட் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் ஆய்வரங்கும், செப்ரெம்பர் மாதமளவில் நிறைவுவிழா, அரங்க நிகழ்வுகள் இடம்பெறும்.






# மாற்றுத் திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கி வைப்பு!

**(சர்ஜூன் லாபீர்)**

சம்மாந்துறை பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட, கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான ஒரு தொகை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சமூக சேவை உத்தியோகத்தர் அ.அகமட் சபீர் , நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் நளிர், சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவைப்பிரிவின் பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# ஊசி மலைப் பகுதியில் தேங்கியுள்ள பிளாஸ்டிக் பொருள்களால் அசௌகரியம்

**(மஸ்கெலியா)**

நல்லதண்ணி சிவனொபாத மலைக்கு செல்லும் சாலையில் சிவனொளிபாத மலைக்கு வந்து செல்லும் உள்நாட்டு யாத்திரிகர்கள் ஊசி மலைப் பகுதியில் விட்டு சென்றுள்ள பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் உக்காத பொருள்கள் அந்தப் பகுதியில் பாரிய சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று அந்தப் பகுதியில் உள்ள சுற்று சூழல் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாத்திரிகர்கள் ஊசி மலை பகுதியில் தங்களது நேத்திக் கடன்களை முடித்து விட்டு பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் உக்காத பொருள்கள் அந்தப் பகுதியில் உள்ள வனப் பகுதியில் எறிந்து விட்டுச் செல்கின்றனர். இதனால் சிவனொளிபாத மலை வன பகுதிகளும் வீதியும் பாரிய சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்கியுள்ளன.

ஊசி மலைப் பகுதியிலும் மற்றும் சிவனடி பாத மலைக்கு செல்லும் சாலையிலும் உக்காத பொருள்களை சிவனொளிபாத மலைக்கு செல்லும் யாத்திரிகர்கள் விட்டுச் செல்வதால் பாரிய அளவில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடக்கு - கிழக்கு தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சு நடத்த வேண்டும்

## அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(கே. எ. ஹமீட் )

கடந்த 30 வருட காலமாக வட - கிழக்கில் நடைபெற்ற கொடூர யுத்தத்தில் வடக்கு - கிழக்கில் வாழ்ந்து வந்த மூவின மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். பாரிய பிரச்சினைகளையும் எதிர் நோக்கினர். தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான பிரச்சினைகளை தமிழ் - முஸ்லிம் மதத்தவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து பேச்சு மேற்கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண உள்ளோம்.

பொது நிருவாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் மீதான குழுநிலை நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது,

கடந்த 30 வருட கால கொடூர யுத்த காலத்தில் சுதந்திரமாகப் பேசுவதற்கு உரிமை இல்லாதவர்களாக இருந்தோம். நாய்களைச் சுடுவது போன்று மனிதர்களைப் படுகொலை செய்தார்கள் என்பதை நாம் மறந்து விட முடியாது. ஆகவே நாடாளுமன்றத்தில் நான் ஒரு வீரனாக பேசுகிறேன் என்பதற்காக நீங்கள் எனது முஸ்லிம் சமூகத்துக்கு உதவி புரிய வேண்டாம்.

வடக்கு - கிழக்கில் வாழும் மூவின மக்களின் பிரச்சினைகளுக்காகச் சமூகங்களின் மக்கள் பிரதிநிதிகளையும், புத்திஜீவிகளையும் அழைத்து பேச்சு நடத்துவதன் ஊடாக தீர்வு காண்பது எமது குறிக்கோளாகும். தேர்தல்களில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகத் தமிழ் மக்கள் மத்தியிலும் முஸ்லிம் மக்கள் மத்தியிலும் இனவாதம் பேசுவதை நாங்கள் வன்மையாக எச்சரிக்கிறோம்.

மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதால் மத்திய அரசும், நாடாளுமன்றச் செயற்பாடுகளுக்கு அப்பால் நமது மக்களுக்குப் பணி செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தும் செயற்பாடுகள் மாகாண சபைகளிடம் இருந்து வந்தன.



இந்தச் செயற்பாடுகள் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்ததால் பல ஆண்டு காலமாக மாகாண சபைத் தேர்தல்கள் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே விரைவில் மாகாண சபைகளின் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாகாண சபைகள் அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேசத்துக்கான தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்பட வேண்டும் என்ற சாய்ந்தமருது பிரதேச மக்களின் நீண்ட காலக் கோரிக்கை தொடர்ந்தும் ஏமாற்றப்படும் நிலை காணப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் கல்முனை சாந்தால் கேணி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் சாய்ந்தமருது பிரதேசத்துக்கான தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

5 வருடங்கள் ஆட்சியில் இருந்த போதும் சாய்ந்தமருதுக்கான தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்படாமல் ஏமாற்றப்பட்டது. கடந்த 2020 ஆம் ஆண்டு உள்நாட்டலுவல்கள் பொது நிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனால் சாய்ந்தமருது பிரதேசத்துக்கான தனியான நகர சபை வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அண்ணன் வழங்கிய அனுமதியை தம்பி ரத்து செய்தார். எனவே சாய்ந்தமருது மக்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று சாய்ந்தமருது நகர சபை தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானியை அமுல்படுத்தி சாய்ந்தமருது பிரதேச மக்களுக்கான தனியான நகர சபையை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை,சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைக் குழு கூட்டங்கள் நடைபெறுகின்றன.

பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபத்தின்படி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இரண்டரை மணித்தியாலங்களில் நடத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி பிரதேசங்களில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைக் குழு கூட்டங்கள் 5 மணித்தியாலங்கள், 6 மணித்தியாலங்கள் நடைபெற்றன. இதனால் மக்கள் பிரதிநிதிகளும் திணைக்களத் தலைவர்களும் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாய அமைப்பின் தலைவர் ஒருவர் மயங்கி விழுந்துள்ளார். எனவே பொது நிர்வாக அமைச்சு இது தொடர்பான சுற்று நிருபத்தை அமுல்படுத்த வேண்டும்.

அது மாத்திரமின்றி ஒவ்வொரு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்துக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் 10 பேரை அழைத்து வருகின்றார். அவர் ஒரு மணித்தியாலம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பேசுகின்றார். அவர் அழைத்து வந்த 10 பேரும் அவர் பேசும்போது கை தட்டி மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். இச்செயற்பாடானது பொது நிர்வாக அமைச்சின் செயற்பாடுகளுக்கும், ஜனாதிபதிக்கும், அரசுக்கும் அவப்பெயரை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.


புதிய சுற்று நிருபத்தை உருவாக்கி சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதேச ஒருங்கிணைக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள 10 பேருக்கு அனுமதி வழங்க வேண்டும். இந்த விடயத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் நான் ஜனாதிபதியிடம் முறையிடுவேன்.- என்றார்.

# புதுக்குடியிருப்பில் மாபெரும் பிரதேச விற்பனைச் சந்தை

(பா.சதீசன்)

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்குடன் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான விற்பனைச் சந்தை ஒன்று நாளையதினம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை பஸ்தரிப்பு நிலையத்தில் இடம்பெற இருக்கின்றது.

தற்கால பொருளாதார நெருக்கடி காலத்தில் , உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கும், உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்



திப்பிரிவு, மகளீர்விவகார அமைச்சு, தொழிற்துறை திணைக்களம், புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகம், புதுக்குடியிருப்பு பிரதேசசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் மாபெரும் பிரதேச விற்பனைச் சந்தை ஒன்று நாளைய தினம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை பஸ்தரிப்பு நிலையத்தில் காலை 9 மணிக்கு இடம்பெற இருக்கின்றது.

இந்த விற்பனை சந்தையில் புதுக்குடியிருப்பு பிரதேச உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட இருப்பதோடு, தேவையான உள்ளூர் உற்பத்தியாளர்களின் பொருள்களை கொள்வனவு செய்ய முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாசிக்குடாவில் விபச்சார விடுதி முற்றுகை; முகாமையாளர் உட்பட 3 பெண்கள் கைது!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பாசிக்குடாவில் விபச்சார விடுதி ஒன்றை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் முற்றுகையிட்டு பெண் முகாமையாளர் உட்பட 3 பெண்களை நேற்று வெள்ளிக்கிழமை (07) மாலை கைது செய்து ஒப்படைத்துள்ளனர் என்று பாசிக்குடா பொலிசார் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் நீண்ட காலமாகக் ஹோட்டல் என்ற பேர்வையில் விபச்சார விடுதி நடத்தி வருவது தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனை அடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.லலித் லீலாரத்தினவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் தலைமையிலான பொலிஸார் குறித்த விபச்சார விடுதி தொடர்பாக நீதிமன்றத்துக்கு அறிக்கை ஒன்றை சமர்பித்து அனுமதியை பெற்றிருந்தனர். அதன் பின்னர் நேற்று மாலை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் இரண்டு பெண்கள் மற்றும் விடுதியின் பெண் முகாமையாளர் உட்பட 3 பெண்களை கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.




# மூதூர் நகரப் பகுதியில் இரவில் கட்டாக்காலி மாடுகள் அட்டகாசம்!

(முஹம்மது ஜிப்ரான்)

மூதூர் பிரதேச சபைக்கு உட்பட்ட மூதூர் மட்டக்களப்பு பிரதான வீதியில் கட்டாகாலி மாடுகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதி ஊடான போக்குவரத்துத் தடைப்படுவதோடு பெரும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேசத்தில் மிக முக்கியமான வீதியாக இது காணப்படுவதோடு மக்கள் நிறைந்த வீதியாகவும் இது காணப்படுகின்றது.

இரவு நேரங்களில் நாளொன்றுக்கு சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்த வருகின்றனர்.

அத்துடன் வைத்தியசாலை, மிக முக்கியமான வர்த்தக நிலையங்கள், வங்கிகள் அதிகமாகக் காணப்படும் பிரதான வீதியாகவும் இது உள்ளது.

இவ்வீதியில் கட்டாகாலி மாடுகளின் நடமாட்டம் அதிகரிப்பால் இரவு நேர வர்த்தக நிலையங்களை நடத்துவோர் மற்றும் பாதசாரிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் வைத்தியசாலை அம்புலன்ஸ் அதிகமாக சென்று வரக்கூடிய பாதையாகவும் இது காணப்படுகின்றது.

இவ் விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.



# கிழக்கு ஆளுநரைச் சந்தித்தார் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்!

(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும், புதிதாக நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (07) திருகோண மலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாண மக்க ளின் அன்றாட வாழ்க்கை நிலைமை குறித்தும், மூவின மக்கள் வாழும் இந்த மாகாணத்தில் சட்ட ஒழுங்கைப் பரா மரிப்பது தொடர்பிலும் மிக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.



இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர் அருள் ராஜ் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



# தொழில் தேடுவோர் தொழிற் சந்தையை தமக்கானதாக்கி வெற்றிகொள்ள வேண்டும்

## யாழ். மேலதிக அரச அதிபர் ஸ்ரீமோகன் வலியுறுத்து

(எஸ். நிதர்ஷன்)

யாழ். மவட்டத்தில் கல்வி நடவடிக் கைகளை முன்னெடுத்து, தத்தமது கல்வித் தகுதிக்கு ஏற்ப தெழில் தேடிக் கொண்டிருக்கும் இளைஞர், யுவதி கள் இந்தத் தொழிற் சந்தையைத் தமக்கானதாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஸ்ரீமோகன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகமும் மனிதவள மற்றும் வேலை வாய்ப்புத் திணைக் களமும் இணைந்து முன்னெடுத்த தொழிற் சந்தை நிகழ்வு இன்று (08) யாழ். மாவட்ட செயலகத்தில் நடை பெற்றது.

இதன்போது இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

தொழில் வழங்குநர்கள் மற்றும் தொழில் தேடுவோரை ஒன்றிணைத்து இளைஞர் யுவதிகளின் தொழிற் தேடுத லுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் களமாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

இதை எமது பகுதி தொழில் தேடு நர்கள் தமது எதிர்காலம் கருதியதாக பயன்படுத்தி வெற்றிகாண வேண்டும்.- என்றார்.









# கிறேட் வெஸ்டன் பாடசாலைக்கு ஜப்பான் நாட்டவர்கள் வருகை!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு கிறேட்வெஸ்டன் தோட்ட அதிகாரி சரத் ரணவீர ஊடாக ஜப்பான் நாட்டில் இருந்து பலர் வருகை தந்திருந்தனர்.

ஜப்பான் நாட்டில் இருந்து வருகை தந்தவர்களுக்குப் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் தலைமையில் மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் இளங்கோ, தோட்ட அதிகாரி சரத் ரணவீர, தோட்ட உதவி அதிகாரி ஹெகான் அபேவர்த்தன மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஜப்பான் நாட்டிலிருந்து வருகைதந்தோர் பாடசாலையில் நிலவும் குறைபாடுகளை கவனத்தில் கொண்டனர். அத்துடன் எதிர்காலத்தில் அதனை நிவர்த்தி செய்வர் எனவும் தெரிவித்தனர்.






# சமூக பொருளாதார அபிவிருத்தி சங்கங்களின் வருடாந்த மீளாய்வும் கௌரவிப்பும் திருமலையில்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து செயற்படும் “இளைஞர் அபிவிருத்தி அகம்” தன்னார்வ நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமூக பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கான வருடாந்த மீளாய்வும் கௌரவிப்பு நிகழ்வும் திருகோணமலை குளக்கோட்டன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, பட்டிப்பளை மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் வெருகல், சேருவில, மூதூர் பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களால் நிர்வகிக்கப்படுகின்ற 3287 அங்கத்தவர்களை கொண்ட 49 கூட்டுறவுச்சங்கங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் பொ.தனேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.

சுவீடன் நாட்டைத் தலைமையக மாக கொண்ட “ வீ எபெக்ட்” என்ற சர்வ தேச தன்னார்வ நிறுவனத்தின் நிதி அனுசரணையில், 2013 ஆம் ஆண்டு முதல் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம், பெண்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, பெண்களால் நடத்தப்படும் கூட்டுறவு சங்கங்களை உருவாக்கி அவற்றை பலப்படுத்தி வருகின்றது.

பெண்களால் நடத்தப்படும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தோட்டப் பயிர்ச் செய்கை, மரக்கறிகள் மற்றும் பழங்களைச் சந்தைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளில் தமது சங்க அங்கத்தவர்களுக்கு கடன் வசதி அளித்தல் மற்றும் தொடர்புடைய ஆலோசனைகளை வழங்குதல் மூலம் வருமான வழிகளை அதிகரிக்க துணை செய்து வருகின்றது.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் அகம் நிறுவனத்தின் பிரதான இணைப்பாளர் பொ.சற்சிவானந்தன், பிரதான நிதி அனுசரணையாளரான வீ எபெக்ட் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தே.மயூரன், மாவட்ட தன்னார்வ நிறுவனங்களின் இணைப்பாளர், மாவட்ட மகளிர் அபிவிருத்தி அதிகாரி ஆகியோரும் கூட்டுறவு சங்கங்கங்களின் அங்கத்தவர்களும் பங்குபற்றினர்.





# வட்டவான் அம்மன் வேள்விப் பொங்கல்





(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம், வட்டவான் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வேள்விப் பொங்கல் இடம்பெற்றது.

இதன்போது, கரகம் வீதிவலம் வருதல், மஞ்சள் நீராடல், பக்தர்களின் பொங்கல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பூசகர் பார்த்தசாரதிமூர்த்தி பிரதான கரகத்தைச் சுமந்து வந்தார். இதில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# விஜய்யுடன் கைகோர்க்க தயாராகிறாரா ரங்கசாமி?

## கலக்கத்தில் புதுச்சேரி பா.ஜ.க. வட்டாரம்





புதுச்சேரியில் இதுவரையில் அதிக நாள்கள் முதல்வராக இருந்தவர் தற்போதைய முதல்வர் ரங்கசாமி மட்டும் தான். அடுத்த தேர்தலிலும் முதல்வர் இருக்கையை தக்கவைத்து சாதனையை இன்னும் வலுவாக்க ரங்கசாமி போடும் கூட்டணிக் கணக்குகள் பா.ஜ.க-வை பதறவைத்திருக்கிறது.

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக ரங்கசாமி இருக்கிறார். இருந்த போதும் அவரது பல கோரிக்கைகள் மத்திய அரசால் கண்டுகொள்ளப்படாமலேயே இருக்கிறது. அதேபோல், கூட்டணியில் அங்கம் வகிக்கும் பா.ஜ.க எம்.எல்.ஏ-க்கள் வாரியத் தலைவர் பதவிகளை கேட்டு மனு போட்டும் மவுனமாகவே இருக்கிறார் ரங்கசாமி.

மாநில அந்தஸ்து உள்ளிட்ட பல முக்கிய பிரச்சினைகள் குறித்து பேச டில்லிக்குச் செல்லாத ரங்கசாமி, பிரதமர் மோடி பதவியேற்பு, தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள் கூட்டம் என அனைத்தையும் புறக்கணித்தே வருகிறார். பா.ஜ.க. எம்.எல்ஏ-க்கள் மூவரும், பா.ஜ.க. ஆதரவு சுயேச்சைகள் மூவரும் ரங்கசாமியை வெளிப்படையாக விமர்சித்து வருகிறார்கள். ஆனாலும், 2026 இலும் ரங்கசாமியுடனான கூட்டணியை தொடர விரும்புகிறது டில்லி பா.ஜ.க. தலைமை.

ஆனால் ரங்கசாமியோ, தனது நண்பரான புஸ்ஸி ஆனந்த் மூலமாக வேறு கணக்குப் போடுகிறார். ஆனந்த் மூலமாக நடிகர் விஜய்யுடன் நட்பில் இருக்கும் ரங்கசாமி, விஜய் நடத்திய விக்கிரவாண்டி த.வெ.க. மாநாடு வெற்றி பெற புஸ்ஸி ஆனந்துடன் சேர்ந்து அப்பா பைத்தியம் சாமி கோயிலில் சிறப்பு பூஜை செய்து ஆசிர்வாதம் செய்தார்.

ரங்கசாமியின் அண்மைக்கால நகர்வுகள் அனைத்துமே விஜய் அரசியலை மையப்படுத்தியே இருப்பதால், இவரையும் விட்டுவிட்டு என்ன செய்வது என பதறிக் கிடக்கிறது புதுச்சேரி பா.ஜ.க. வட்டாரம். “வரும் தேர்தலிலும் புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ரங்கசாமி தான் தலைமை ஏற்பார். முதல்வர் வேட்பாளரும் அவரே தான்” என பா.ஜ.க-வைச் சேர்ந்த பேரவைத்தலைவர் செல்வம் தெரிவித்திருப்பதும் ரங்கசாமிக்கு அணைபோடத் தான் என்கிறார்கள்.

ஆனால் ரங்கசாமியோ வழக்கம் போல், “தேர்தல் சமயத்தில் கூட்டணி பற்றி பார்க்கலாம்” என நழுவி வருகிறார். பா.ஜ.க-வினரிடம் கேட்டால், “ரங்கசாமி எப்போதும் இப்படித்தான். அவர் எங்கள் கூட்டணியில் தான் இருப்பார்” என்று நம்பிக்கையோடு சொல்கிறார்கள். புதுவையை ஒட்டியுள்ள கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, காரைக்காலை ஒட்டியுள்ள நாகை, மயிலாடுதுறை மற்றும் சேலம் ஆகிய தமிழக பகுதிகளில் தனது என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு அடித்தளம் இருப்பதாக முதல்வர் ரங்கசாமி கருதுகிறார்.

இங்கெல்லாம் அவர் சார்ந்த வன்னியர் சமூகத்து மக்கள் கணிசமாக இருக்கிறார்கள். இதையெல்லாம் மனதில் வைத்தே, “இம்முறை என்.ஆர்.காங்கிரஸ் தமிழகத்திலும் போட்டியிடும்” என ரங்கசாமி சொல்லி இருக்கிறார். விஜய்யுடன் இருக்கும் நெருக்கத்தை வைத்து புதுச்சேரியில் த.வெ.க – என்.ஆர்.காங்கிரஸ் கூட்டணியை உருவாக்க நினைக்கிறார் ரங்கசாமி.

அந்தக் கூட்டணியில் புதுச்சேரியை ஒட்டிய தமிழக மாவட்டங்களில் என்.ஆர். காங்கிரஸ் வேட்பாளர்களை களமிறக்கினால் ஒரு கை பார்க்கலாம் என்பதும் அவரது கணக்கு என்கிறார்கள். அவரின் இந்தத் திட்டம் கைகூடி வந்தால் மேற்சொன்ன மாவட்டங்களில் பாமக வாக்கு வங்கிக்கும் பங்கம் உண்டாக்கலாம் என்கிறார்கள்.

இதுபற்றிஎன்.ஆர்.காங்கிரஸ்தரப்பில் பேசியவர்கள், “காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து தனிக்கட்சி தொடங்கிய போது அப்பா பைத்தியம் சாமியிடம் குறி கேட்டுத்தான் ரங்கசாமி முடிவெடுத்தார். அதேபோல், விஜய் கட்சியுடன் கூட்டணி வைப்பது, தமிழகத்தில் என். ஆர்.காங்கிரஸை காலூன்ற வைப்பது – இதெற்கெல்லாமும் குறிகேட்டுத்தான் முடிவெடுத்திருப்பார். ஆனாலும், அவர் என்ன நினைக்கிறார் என்பது அவருக்குத்தான் தெரியும். கடைசி வரைக்கும் மற்றவர்களுக்கு எதுவுமே தெரியாது” என்றனர்.

# பெண்களை பாதுகாக்க தவறிய தி.மு.க. அரசை மாற்றுவோம்

## மகளிர் தின வாழ்த்தில் விஜய் கருத்து

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யாத திமுக அரசை மாற்றுவோம் என சர்வதேச மகளிர் தின வாழ்த்தில் நடிகர் விஜய் கூறியுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் தங்களின் வாழ்த்துகளை நேற்றே தெரிவித்திருந்தனர். ஆனால் த.வெ.க. தலைவர் விஜய் நேற்று அக்கட்சியின் முதல் இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கவனம் செலுத்தினார்.

இந்நிலையில் இன்று காலை தமிழக முதல்வர், அரசின் பெண்களுக்கான நலத்திட்டங்களை பட்டியலிட்டு மகளிர் தின வாழ்த்தை காணொலியாக வெளியிட்ட சில மணி நேரங்களில் த.வெ.க தலைவர் விஜய்யும் மகளிர் தின வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அந்த காணொலியில் விஜய் குறிப்பிடுகையில்,

“எல்லோருக்கும் வணக்கம். இன்று மகளிர் தினம். தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் அனைவரையும் எனது அம்மா, அக்கா, தங்கை, தோழியாகக் கருதுகிறேன். உங்கள் அத்தனை பேருக்கும் மகளிர் தின வாழ்த்துகள் சொல்லாமல் இருக்க முடியாது. அனைவருக்கும் எனது மகளிர் தின வாழ்த்துகள். சந்தோஷம்தானே!?.

பாதுகாப்பாக இருக்கும்போதுதானே சந்தோஷமாக இருக்க முடியும். அப்படி எந்த பாதுகாப்பும் இல்லாதபோது சந்தோஷம் இருக்காது தானே! அப்படி நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகிறது. என்ன செய்ய. நீங்கள், நான் எல்லோரும் சேர்ந்துதான் இந்த தி.மு.க. அரசை தேர்ந்தெடுத்தோம். ஆனால் அவுங்க இப்படி நம்மை ஏமாற்றுவார்கள் என்று இப்போதுதான் தெரிகிறது. எல்லாமே இங்க மாறக்கூடியதுதானே. மாற்றத்துக்கு உரியதுதானே.

கவலைப்படாதீங்க. இந்த 2026 ஆம் ஆண்டு, நீங்க, நான் எல்லோரும் சேர்ந்து பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறிய தி.மு.கவை மாற்றுவோம். அதற்கு மகளிர் தினமான இன்று நாம் எல்லோரும் சேர்த்து உறுதியேற்போம். உங்களுடைய எல்லா சூழலிலும் ஒரு மகனாக, அண்ணனாக, தம்பியாக, தோழனாக நான் உங்களோடு நிற்பேன். நன்றி, வணக்கம்.” என்று கூறியுள்ளார்.



# ரஷ்யா மீது பொருளாதார தடை விதிப்பதற்கு அமெரிக்கா திட்டம்

உக்ரைனுடன் போர் நிறுத்தம் மற்றும் அமைதி உடன்படிக்கை எட்டப்படும் வரை ரஷ்யா மீது பாரிய அளவிலான பொருளாதாரத் தடைகள் மற்றும் வரிகளை விதிப்பது தொடர்பில் பரிசீலித்து வருவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து ரஷ்யாவுக்கு ஆதரவான கருத்துக்களை முன்வைத்திருந்த டொனால்ட் ட்ரம்ப் நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் கருத்துரைத்த போது இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனின் வலுசக்தி அமைப்புகளை இலக்கு வைத்து ரஷ்யா நேற்றைய தினம் தாக்குதலை நடத்தியிருந்தது.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகள் மற்றும் வரிகளை விதிப்பது தொடர்பில் பரிசீலிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், ரஷ்யாவின் தாக்குதல் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# அனைத்து ஆண்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி!

## டொனால்ட் டஸ்கின் அதிரடி அறிவிப்பு

போலந்து நாட்டில் அனைத்து ஆண்களையும் இராணுவ பயிற்சிக்கு உட்படுத்தும் வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருவதாக போலந்து நாட்டின் பிரதமர் டொனால்ட் டஸ்க் தெரிவித்துள்ளார்.

போலந்து நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அனைத்து வயது வந்த போலந்து ஆண்களுக்கும் கட்டாய இராணுவ பயிற்சி அளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

போர் நிலைமை ஏற்படுமாயின் ஒவ்வொரு ஆணும் தயாராக இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இதற்கான மாதிரி திட்டம் தயாரிக்கப்படும் எனவும், இதன் மூலம் நாட்டு இராணுவத்தின் தயார்நிலை உறுதி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், உக்ரைன் மற்றும் ரஷ்யா நாடுகளின் தற்போது 1.3 மில்லியன் இராணுவ வீரர்கள் இருக்கின்றனர்.

ஆனால் போலந்து நாட்டின் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சம் ஆகும்.

தற்போதுள்ள இரண்டு இலட்சம் வீரர்களை 5 இலட்சமாக அதிகரிப்பதற்காகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக போலந்து நாட்டின் பிரதமர் டொனால்ட் டஸ்க் தெரிவித்துள்ளார்.



# அணுசக்தி ஒப்பந்த பேச்சு குறித்து ஈரான் ஜனாதிபதிக்கு ட்ரம்ப் கடிதம்

அணுசக்தி ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஈரானின் ஜனாதிபதிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடிதம் எழுதியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்துவது தொடர்பாக ஒரு ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனத் தெரிவித்து ஈரானின் அயதுல்லா அலி கமேனிக்கு ஒரு கடிதம் அனுப்பியதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



ட்ரம்ப் எழுதிய கடிதம் குறித்து வெள்ளை மாளிகை உறுதி செய்துள்ளதாக தெரிவக்கப்படுகின்து.

எனினும் ஈரானிலிருந்து இவ்விடயம் தொடர்பாக எவ்வித பதிலும் இது வரை கிடைக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு

பக்கங்கள் - 2

சனிக்கிழமை 08/03/2025

## வரி விதிப்பினைப் பயன்படுத்தி மீண்டும் பிரதமராக ட்ரூடோ திட்டம்

### ட்ரம்ப் குற்றச்சாட்டு



C2▶




# கனடாவிலிருந்து அதிகளவானோர் அதிரடியாக நாடு கடத்தப்பட்டனர்

கனடாவில் இருந்து தமிழர்கள் உட்பட பெருந்தொகையான வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கனேடிய எல்லை பாதுகாப்பு முகவர் அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த வருடத்தில் பெருந்தொகையான வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் புகலிடம் மறுக்கப்பட்டவர்களே அதிகம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 19 ஆம் திகதி வரை 7300 பேரை நாடு கடத்தியுள்ளதாக முகவர் அமைப்பின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரையான காலப்பகுதிகளை ஒப்பிடுகையில் கடந்த வருடத்திலேயே அதிகளவான வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்பட்டுள்னர்.

இதில் பல தமிழர்களும் அடங்குவர். சமகாலத்தில் கனடாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளை சமாளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களில் விசிட்டர் விசா மூலம் எதிர்பார்த்ததை விட பல மடங்கான வெளிநாட்டவர்கள் கனடாவுக்குள் நுழைந்ததுடன், அவர்களில் பெரும்பாலானவர்களில் கனடாவில் அகதி அந்தஸ்து கோரியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடா மக்களை கைவிடமாட்டேன்



## ஜஸ்டின் ட்ரூடோ உருக்கம்

கனடா மக்களை ஒரு போதும் கைவிட மாட்டேன் என தனது இறுதி உரையில் ஜஸ்டின் ட்ரூடோ உருக்கமாக தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியாக கனடா தற்போது பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகிறது. மேலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடா பொருள்களுக்கு வரியை அதிகரிப்பது தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இது கனடா அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், கனடாவின் புதிய பிரதமரை ஆளும் லிபரல் கட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை அறிவிக்க உள்ளது.

C2▶

# கனடா - அமெரிக்க எல்லையில் உடல் உறைந்து மிக மோசமான நிலையில் குடும்பம் ஒன்று மீட்பு



கனடா மற்றும் அமெரிக்க எல்லையில் அமைந்துள்ள வனப்பகுதியில் இருந்து இரண்டு பிள்ளைகள் உட்பட ஒரு குடும்பத்தினர் உடல் உறைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

கனடா - அமெரிக்க எல்லையில் உள்ள கியூபெக் பகுதியில் இருந்தே அவர்கள் மிக மோசமான நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில், RCM பொலிஸார் தெரிவிக்கையில், உள்ளூர் நேரப்படி அதிகாலை 3.15 மணியளவில் கியூபெக் மாகாண பொலிஸாரிடம் இருந்து தகவல் கிடைத்துள்ளதாகவும், பிஞ்சு குழந்தைகள் இருவர் உட்பட ஒரு தம்பதி மிக மோசமான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர் எனவும் உடனடியாக அவர்களை மீட்க வேண்டும் என்றும் கோரியதாக தெரிவித்துள்ளனர்.

கடும் பனிப்பொழிவின் போது பல மணி நேரம் நடந்து, வனப்பகுதியில் அவர்கள் பாதையை தொலைத்துள்ளனர் என நம்பப்படுகிறது. அது மட்டுமின்றி, அந்த தாயாரிடம் இருந்து அவசர இலக்கத்திற்கு அழைப்பு சென்றதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து துரிதமாக செயல்பட்ட அவசர உதவிக் குழுவினர் அந்த குடும்பத்தினரை கண்டுபிடிக்க பீரூ உதவியை நாடியுள்ளனர். வனப்பகுதியில் சிக்கியுள்ள அவர்களை 4.15 மணியளவில் அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதுதொடர்பில் அதிகாரிகள் கூறுகையில், அந்த குடும்பமானது ஒரு மரத்தின் அடியில் காணப்பட்டனர். பெற்றோர் தங்கள் காலணிகளை ஆற்றில் தொலைத்துவிட்டனர், மேலும் குழந்தைகள் இருவரும் கடும் குளிருக்கு ஏற்றவாறு உரிய உடை அணிந்திருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

தம்பதியின் வயது உறுதி செய்யப்படவில்லை என்றும், ஆனால் அவர்கள் தங்கள் பிள்ளைகள் இருவரையும் அணைத்துக் கொண்ட நிலையில் சுருண்டு விழுந்துள்ளனர்.

கடுமையான பனிப்பொழிவு காரணமாக அவர்களால் முன்னேறிச் செல்ல முடியாமல் போயுள்ளது. அந்த தாயார் காட்டில் இருந்து பனியில் சறுக்கி ஓடும் வாகனம் மூலம் கொண்டு செல்லப்பட்டார், இரண்டு குழந்தைகளும் அதிகாரிகளால் சுமந்து செல்லப்பட்டனர்.

அவர்கள் நால்வரையும் கியூபெக்கில் உள்ள Châteauguay பகுதி மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அந்த குடும்பம் அகதிகள் நிலைக்கு அரசாங்கத்திடம் முறையிடலாம் என்றே கூறப்படுகிறது. அவர்கள் எந்த நாட்டினர் உள்ளிட்ட தகவல் ஏதும் கியூபெக் அதிகாரிகளால் வெளியிடப்படவில்லை.

# வரி விதிப்பினைப் பயன்படுத்தி மீண்டும் பிரதமராக ட்ரூடோ திட்டம்

## ட்ரம்ப் குற்றச்சாட்டு



ஜஸ்டின் ட்ரூடோ, அமெரிக்காவுடனான வரி விதிப்பு பிரச்சினையை பயன்படுத்தி மீண்டும் கனடா பிரதமராக முயற்சிக்கிறார் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

கனடா மீது அமெரிக்கா வரி விதிக்க இருப்பதாக கூறியுள்ள விடயம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொறு வடிவம் எடுக்கிறது.

ட்ரம்ப் வரி விதிக்கிறார், பிறகு தள்ளி வைக்கிறார், இப்படியே அந்த பிரச்சினை இழுத்துக்கொண்டே செல்கிறது.

இந்நிலையில், ட்ரம்ப் தனது சமூக ஊடகப்பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவு ஒன்றில், ட்ரூடோ கனடாவுக்காக இவ்வளவு மோசமான வேலையைச் செய்துள்ள நிலையிலும், அமெரிக்காவுடனான வரி பிரச்சினையை பயன்படுத்திக்கொள்ள நினைக்கிறார் என்று நினைக்கிறேன்.

வரி பிரச்சினைக்கு அவரே முக்கிய காரணமாக இருந்தும், அந்த பிரச்சினையைப் பயன்படுத்திக்கொண்டு மீண்டும் பிரதமராக முயற்சிக்கிறார் ட்ரூடோ, வேடிக்கையாக இருக்கிறது என்று ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

# நியூ பிரன்சுவிக்கில் போதை மாத்திரைகள் மீட்பு

நியூ பிரன்சுவிக் பொலிஸார் பாரியளவில் போதை மாத்திரைகளை மீட்டுள்ளனர்.

கடந்த வார இறுதியில் பெருமளவில் போதைப்பொருள்களை பொலிஸார் மீட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மரங்களினால் அடர்ந்த காட்டுப் பகுதியொன்றில் சுமார் 40,000 மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. வேறு விசாரணைக்காக தேடுதல் நடத்தி வந்த போது இந்த போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த போதை மாத்திரைகளின் சுமார் 18 கிலோ கிராம் என தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரிகள், இது மெத்தாம் ஃபெட்டமின் (Methamphetamine) மாத்திரைகள் என சந்தேகிக்கின்றனர்.

போதைப்பொருள்களின் சந்தை மதிப்பு 200,000 டொலர் வரை இருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர்.

கடந்த சில மாதங்களில் அந்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளைக் கண்டவர்கள் ஏதேனும் தகவல் தெரிந்தால், உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**கனடா மக்களை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது கனடாவின் இடைக்கால பிரதமராக செயற்பட்டு வரும் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகுவதற்கு முன் செய்தியாளர்களை சந்தித்து தனது இறுதி உரையை நிகழ்த்தினார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரதமர் அலுவலகத்தில் ஒவ்வொரு நாளும், நான் கனடா மக்களை முதன்மைப்படுத்தி, அவர்களுக்காக உழைத்தேன். மக்களின் ஆதரவு எனக்கு இருக்கிறது என்பதை உறுதிசெய்துள்ளேன்.

மக்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்பதை உறுதியாக சொல்கிறேன். எனது தலைமையிலான அரசாங்கத்தின் கடைசி நாள்களில் கூட, நான் கனடா மக்களை ஒருபோதும் கைவிட மாட்டேன் என்பதை கூற விரும்புகிறேன்." என்றார்.